# செயலாற்றுகை அறிக்கை

# 2014

பொது தொழில்முயற்சிகள் திணைக்களம்

## தொலை நோக்கு:

“இலங்கையிலுள்ள பொதுத் தொழில்முயற்சிகளின் சிறந்த நிர்வாகத்தை

உறுதிப்படுத்தும் முக்கிய நிறுவனமாகத் திகழ்தல்”

## எமது பணி

“செயலாற்றுகையை உச்சப்படுத்தி பொது மக்களின் நலன்களைப் பாதுகாப்பதற்கான சிறந்த செயன்முறைகளின் ஊடாகப் பொதுத் தொழில்முயற்சிகளில் நிர்வாகத்தைப் பலப்படுத்துதல்”

**உள்ளடக்கம்**

**பொது தொழில்முயற்சிகள் திணைக்களத்தின் செயலாற்றுகை**

1. சுருக்க அறிமுகம்
2. 2014ஆம் ஆண்டில் பொது தொழில்முயற்சிகள் திணைக்களத்தின் பிரதான செயற்பாடுகள்
3. பொதுத் தொழில்முயற்சிகள் திணைக்களத்தின் விடயப் பரப்பின் கீழ் உள்ள அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் பௌதிக செயலாற்றுகை

    3.திறைசேரி 1க்கான பங்கிலாபங்கள்/ தீர்வைகள்

    3.அரசுக்குச் சொந்தமான த 2◌ொழில்முயற்சிகளில் வேலைவாய்ப்பு

    3.அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகள 3◌ுக்கான வரவு செலவுத் திட்ட உதவி

    3.உபாயமுறையில் முக்கியத்துவம் பெறுகின்ற அரசுக்குச் சொந்தமான வியாபாரத் தொழில்முயற்சிகளின் பற்றிய சுருக்கம்

4. அரசுக்குச் சொந்தமான வியாபாரத் தொழில்முயற்சிகளின் செயலாற்றுகையை மேம்படுத்துவதில் பொது தொழில்முயற்சிகள் திணைக்களத்தின் பங்களிப்பு

    4.அரசுக்குச் சொந்தமான வியாபாரத் தொழில்முயற்சிகளின் செயலாற்றுகைகளை மேம்படுத்துவதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும்பொது தொழில்முயற்சிகள் திணைக்களத்தினால் செய்யப்பட்ட சிபாரிசுகள்

5. திணைக்களத்தின் ஊழியர்களுக்கு வலுவூட்டல்

6. நிதி முகாமை

பின்னிணைப்பு I: பொது தொழில்முயற்சிகள் திணைக்களம் ஆம் ஆண்டில் பங்கேற்ற 2014 பொதுத் தொழில்முயற்சிகள் குழுக் கூட்டங்கள்
பின்னிணைப்பு II: ஆண்டறிக்கைகள் சமர்ப்பித்தல் அரசுக்குச் சொந்தமான வியாபாரத் - தொழில்முயற்சிகள்
பின்னிணைப்பு III: அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகள் மூலமான தீர்வைபங்கிலாப / வருமானம் தொழில்முயற்சிகள்
பின்னிணைப்பு IV: பொது திணைக்களத்தின் விடயப் பரப்பின் கீழ் உள்ள அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளுக்கான வரவு செலவுத் திட்ட உதவி

பின்னிணைப்பு V: அரசுக்குச் சொந்தமான 2014 வியாபாரத் தொழில்முயற்சிகளின் 55.12. 31 இல் உள்ளவாறான நிதியியல் மொத்தவிளைவு

## 1. சுருக்க அறிமுகம்

அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளைக் கண்காணிப்பதற்காகவும் 1971 ஆம் 38 ஆம் இலக்கச் சட்டத்தின் பகுதி II ஐ நிர்வகிக்கப்பதற்காகவும் நிறுவன நிர்வாக முறையின் ஊடாக அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் செயலாற்றுகையை மேம்படுத்துவதற்காகவும் பொது தொழில்முயற்சிகள் திணைக்களம் 2002 ஆம் ஆண்டில் மீள உருவாக்கப்பட்டது. இலங்கையில் தற்போது சுமார் 250 அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகள் காணப்படுகின்றன. அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளில் சுமார் 55 சதவீதமானவை பொது தொழில்முயற்சிகள் திணைக்களத்தின் விடயப் பரப்பின் கீழ் உள்ள அதேவேளை அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளில் சுமார் 45 சதவீதமானவை வரவு செலவுத் திட்டத்தில் தங்கியுள்ளமையினால் அவை தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களத்தின் விடயப் பரப்பின் கீழ் உள்ளன. பொது தொழில்முயற்சிகள் திணைக்களத்தின் விடயப் பரப்பின் கீழ் காணப்படும் அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளில் 55 நிறுவனங்கள் வர்த்தகச் செயற்பாடுகளில் அரசுக்குச் சொந்தமான வியாபாரத் தொழில்முயற்சிகளாக அடையாளம் காணப்பட்டுள்ளன. 2013 ஆம் ஆண்டில் 5,096 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்ட இந்த 55 அரசுக்குச் சொந்தமான வியாபாரத் தொழில்முயற்சிகளின் மொத்தச் சொத்துக்களினதும் பெறுமதி 2014 டிசம்பர் 31 ஆந் திகதியில் 10 சதவீதத்தால் அதிகரித்து 5,603 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது. உபாயமுறையில் முக்கியத்துவம் பெறுகின்ற முதல் பத்து அரசுக்குச் சொந்தமான வியாபாரத் தொழில்முயற்சிகளான இலங்கை துறைமுக அதிகாரசபை, வ/ப (இலங்கை) விமான நிலைய விமானப் போக்குவரத்துச் சேவைக் கம்பனி, ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ், இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தபானம், இலங்கை மின்சார சபை, தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை, இலங்கை வங்கி, மக்கள் வங்கி, தேசிய சேமிப்பு வங்கி, இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் என்பவற்றின் சொத்துக்கள் அரசுக்குச் சொந்தமான 55 வியாபாரத் தொழில்முயற்சிகளின் சொத்துக்களில் 89.1 சதவீதமாக அல்லது 4,994 பில்லியன் ரூபாவாகக் காணப்படுகின்றன.

## 2. 2014 ஆம் ஆண்டில் பொது தொழில்முயற்சிகள் திணைக்களத்தின் பிரதான செயற்பாடுகள்

(அ) **சுற்றறிக்கைகளையும் வழிகாட்டல்களுக்கான திருத்தங்களையும் வெளியிடுதல்**
அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் நல்லாட்சியையும் நிதி ஒழுங்கையும் உறுதிப்படுத்துவதற்காக, பொது தொழில்முயற்சிகள் திணைக்களம் பொதுத் தொழில்முயற்சிகளின் தொழிற்பாட்டு மற்றும் நிதி முகாமையுடன் தொடர்புடைய சுற்றறிக்கைகளை/ வழிகாட்டல்களை உருவாக்கி வெளியிடுவதில் தொடர்ச்சியாக ஈடுபட்டது. 2014 ஆம் ஆண்டில் இத்திணைக்களம், 2003 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட வழிகாட்டல்களில் திருத்தங்கள் செய்வதிலும் ஈடுபட்டது. வர்த்தகக் கூட்டுத்தபானங்கள், நியதிச்சட்ட சபைகள், அரசுக்குச் சொந்தமான கம்பனிகள் என்பவற்றின் உத்தியோகத்தர்களுக்கான தொடர்பாடல் வசதிகளையும் போக்குவரத்து வசதிகளையும் வழங்குவதுடன் தொடர்புடையதாக இரண்டு சுற்றறிக்கைகள் இறுதிநிலைப்படுத்தப்பட்டன.

(ஆ) **பொதுத் தொழில்முயற்சிகள் குழுவின் செயன்முறைகளுக்கான உதவிகள்**
பொதுத் தொழில்முயற்சிகள் குழுவினால் மேற்கொள்ளப்பட்ட அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகள் தொடர்பான சோதனைகளின் போது அரசுக்குச் சொந்தமான ஒவ்வொரு தொழில்முயற்சி தொடர்பாகவும் விரிவான அறிக்கைகளை அவற்றுடன் தொடர்புடைய பொதுத் தொழில்முயற்சிகள் குழுக் கூட்டங்களின் போது சமர்ப்பித்ததன் மூலம் பொது தொழில்முயற்சிகள் திணைக்களம் பொதுத் தொழில்முயற்சிகள் குழுவுக்கு ஒத்துழைப்பு வழங்கியது. மேலும், பொதுத் தொழில்முயற்சிகள் குழுவினால் வழங்கப்பட்ட பணிப்புரைகள்/சிபாரிசுகள் தொடர்பில் அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளால் எடுக்கப்பட்ட பின்தொடர் நடவடிக்கைகளின் முன்னேற்றத்தைக் கண்காணித்து பொதுத் தொழில்முயற்சிகள் குழுவுக்கு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டன. பொது தொழில்முயற்சிகள் திணைக்களம் பங்கேற்ற பொதுத் தொழில்முயற்சிகள் குழுக் கூட்டங்களின் பட்டியலொன்று பின்னிணைப்பு I இல் தரப்பட்டுள்ளது.

(இ) அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகள் பாராளுமன்றத்திற்கு ஆண்டறிக்கைகளைச் சமர்ப்பிப்பது தொடர்பில் பொது தொழில்முயற்சிகள் திணைக்களம் மேற்பார்வை நடவடிக்கைகளை மேற்கொண்டது. விபரங்கள் பின்னிணைப்பு II இல் தரப்பட்டுள்ளன.

(ஈ) அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் நிதிக் கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையில் கண்டறியப்பட்டுள்ள கணக்காய்வுக் கண்டுபிடிப்புக்கள் தொடர்பில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

(உ) பொது தொழில்முயற்சிகள் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள், அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் பங்குதாரர் கூட்டங்களில், வருடாந்த/அதிவிசேடப் பொதுக் கூட்டங்களில் திறைசேரியின் பிரதிநிதியாகப் பங்கேற்று அரசாங்கத்தின்

கொள்கைத் திட்டத்திற்கு ஏற்ப அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் செயலாற்றுகையை மேம்படுத்துவதற்கான வழிகாட்டல்களை வழங்கினர்.

(ஊ) அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளில் நல்லாட்சி நடைமுறைகளைப் பேணி வரும் நோக்கில் கணக்காய்வாளர் நாயகத்தின் சிபாரிசின் அடிப்படையில் கம்பனிகள் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளுக்கு கணக்காய்வாளர்கள் நியமிக்கப்பட்டனர்.

(எ) நிதிச் சட்டம், நிதிப் பிரமாணங்கள் அல்லது பொது தொழில்முயற்சிகள் திணைக்களத்தின் சுற்றறிக்கைகள் என்பவற்றுக்கு இணங்க தேவையான சந்தர்ப்பங்களில் அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் செயற்பாடுகளுக்கும் தொழிற்பாடுகளுக்கும் நிதி திட்டமிடல் அமைச்சின் அங்கீகாரத்தைப் பெறுவதற்காக பொது தொழில்முயற்சிகள் திணைக்களம் நிதி திட்டமிடல் அமைச்சுடன் நெருங்கிய தொடர்பைப் பேணி வந்தது. அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளை ஆழமாகப் பகுப்பாய்வு செய்து அரசாங்கத்தின் கொள்கைகளுக்கான அவற்றின் இணக்கப்பாட்டைக் கவனத்திற் கொண்டு பொது தொழில்முயற்சிகள் திணைக்களத்தினால் நிதி திட்டமிடல் அமைச்சுக்கு சிபாரிகள் செய்யப்பட்டன. இதில் மூலதனச் செலவினங்களுக்கான அதிகாரமளிப்பு, கடன்பெறுகை வரையறைகளை அதிகரித்தல் மற்றும் கட்டண மீளாய்வு போன்றவை உள்ளடங்கும்.

(ஏ) நிதி திட்டமிடல் அமைச்சினால் வெளியிடப்பட்ட வழிகாட்டல்கள்/ சுற்றறிக்கைகள் மூலம் பொது தொழில்முயற்சிகள் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை வாகனங்களைக் கொள்வனவு செய்தல், வெளிநாட்டுப் பிரயாணங்கள், வரவு செலவுத் திட்ட ஏற்பாடுகள், காசு விடுவிப்புக்கள் என்பவற்றின் விடயத்தில் அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளுக்கு அனுமதி வழங்குவதற்கு பொது தொழில்முயற்சிகள் திணைக்களம் பயன்படுத்தியது.

(ஐ) அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளுக்கு ஏற்புடையதாகும் வழிகாட்டல்கள் மற்றும் சட்ட ஏற்பாடுகளுடன் தொடர்புடை விளக்கங்களையும் பொது தொழில்முயற்சிகள் திணைக்களம் வழங்கியது.

(ஒ) மீளாய்வுகள் மற்றும் கலந்துரையாடல் மூலம் சட்டங்கள் மற்றும் கட்டளைச் சட்டங்களில் திருத்தங்கள் செய்வதற்கான வசதி ஏற்பாடுகள் பொது தொழில்முயற்சிகள் திணைக்களத்தினால் செய்யப்பட்டன.

(ஓ) திறைசேரியின் செயலாளர், திறைசேரியின் பிரதிச் செயலாளர் அல்லது பணிப்பாளர் நாயகத்தின் தலைமையில் அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் பணிப்பாளரால் சபையுடன் / சிரேஷ்ட முகாமைத்துவத்துடன் முன்னேற்ற மற்றும்

செயலாற்றுகை மீளாய்வு, தொழிற்பாட்டுப் பிரச்சினைகள் தொடர்பான கலந்துரையாடித் தீர்த்தல் போன்றவற்றுக்காகப் பல கூட்டங்கள் நடாத்தப்பட்டன.

(ஔ) பொது தொழில்முயற்சிகள் திணைக்களம் தனது விடயப் பரப்பின் கீழ் உள்ள அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளுடன் தொடர்புடைய வகையில் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனங்களை ஆராய்ந்து பகுப்பாய்வு செய்து நிதி திட்டமிடல் அமைச்சினால் சமர்ப்பிக்கப்படுவதற்காக தேவையான அவதானிப்புக்களை முன்வைத்தது. அவற்றின் விபரம் வருமாறு:

அட்டவணை 1: அமைச்சரவை அவதானிப்புக்கள்

| துறை | அமைச்சரவை அவதானிப்புக்களின் எண்ணிக்கை |
|---|---|
| வங்கி மற்றும் நிதித் துறை | - |
| காப்புறுதி | - |
| எரிசக்தி | 59 |
| துறைமுகங்கள் | 11 |
| விமானப் போக்குவரத்து | 4 |
| பயணிகள் போக்குவரத்து | 7 |
| நிர்மாணத் துறை | 5 |
| பண்ணை விலங்குகள் | 2 |
| பெருந்தோட்டத்துறை | 12 |
| புதுப்பிக்க முடியாத வளங்கள் | 8 |
| சுகாதாரம் | 4 |
| ஊடகம் | 8 |
| சந்தைப்படுத்தல் மற்றும் விநியோகம் | 13 |
| மீள்கட்டமைப்பு | 41 |
| மொத்தம் | **174** |

(க) இலங்கை சேமிப்பு வங்கியின் கூட்டு ஒப்பந்தம் தொடர்பான பேச்சுவார்த்தைகளுக்காக உருவாக்கப்பட்ட குழுவுக்கு பொது தொழில்முயற்சிகள் திணைக்களம் வழிகாட்டல்களை வழங்கியது.

(ங) நிதி திட்டமிடல் அமைச்சின் சார்பில் அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளிடமிருந்து பங்கிலாபங்களும் தீர்வைகளும் அறவிடப்பட்டு இவ்வருடத்திற்கான வருமானக் கணக்கு தயாரிக்கப்பட்டது.

(ச) 2014 ஆம் ஆண்டில் அரச முதலீட்டுக் கணக்கு ஒருங்கிணைப்புச் செயன்முறையொன்று ஆரம்பிக்கப்பட்டு அனைத்து அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளிடமிருந்தும் அவற்றின் துணைக் கம்பனிகளிடமிருந்து தகவல்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன.

## 3. பொதுத் தொழில்முயற்சிகள் திணைக்களத்தின் விடயப் பரப்பின் கீழ் உள்ள அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் பௌதிக செயலாற்றுகை

### 3.1 திறைசேரிக்கான பங்கிலாபங்கள்/ தீர்வைகள்

2012, 2013, 2014 ஆம் ஆண்டுகளில் முறையே 41, 45 மற்றும் 44 அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகள் திரட்டு நிதியத்திற்கு பங்கிலாபங்களையும் தீர்வைகளையும் செலுத்துவதன் ஊடாக முறையே 47 பில்லியன் ரூபா, 35 பில்லியன் ரூபா, 47 பில்லியன் ரூபா ஆகிய தொகைகளை அரசாங்கத்தின் வரியல்லா வருமானத்திற்குப் பங்களிப்புச் செய்தன. கடந்த காலப் பதிவுகளின் படி, தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு, இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தபானம், மக்கள் வங்கி, தேசிய சேமிப்பு வங்கி, தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் என்பன அரசாங்க வருமானத்திற்கு அதிகூடிய பங்களிப்பை வழங்கி வரும் நிறுவனங்களாக விளங்குகின்றன. அதற்கிணங்க, அரசாங்க வங்கிகள், தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு, இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தபானம் என்பன இவ்வருடத்தில் திறைசேரியின் பங்கிலாப மற்றும் தீர்வை வருமானத்திற்கு முறையே 37, 21, 21 சதவீதங்களில் பங்களிப்புச் செய்துள்ளன. எவ்வாறாயினும், தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை, இலங்கை துறைமுக அதிகாரசபை, என்பன போன்ற பாரிய தொழில்முயற்சிகள் மூலதன விரிவாக்கங்களில் முதலீடு செய்ததன் காரணமாக அவற்றிடமிருந்து பங்கிலாப வருமானங்கள் எதுவும் கிடைக்கவில்லை. இலங்கை மின்சார சபை, ஸ்ரீலங்கன் விமான சேவை என்பன குறிப்பிடத்தக்களவில் நட்டமடைந்தன. 2014 ஆம் ஆண்டில் சேகரிக்கப்பட்ட பங்கிலாபங்கள் மற்றும் தீர்வைகளின் பட்டியலொன்று பின்னிணைப்பு III இல் தரப்பட்டுள்ளது.

### 3.2 அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளில் வேலைவாய்ப்பு

2013 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் வேலைப் படை 2014 ஆம் ஆண்டில் 2.1 சதவீதத்தால் அதிகரித்து 261,683 ஆகக் காணப்பட்டது.

### 3.3 அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளுக்கான வரவு செலவுத் திட்ட உதவி

2014 ஆம் ஆண்டில் அரசுக்குச் சொந்தமான 30 தொழில்முயற்சிகளுக்கு வரவு செலவுத் திட்ட உதவியாக 126 பில்லியன் ரூபா வழங்கப்பட்டதுடன், 2013 ஆம் ஆண்டில் அரசுக்குச் சொந்தமான 33 தொழில்முயற்சிகளுக்கு வரவு செலவுத் திட்ட உதவியாக 67 பில்லியன் ரூபா வழங்கப்பட்டிருந்தது. கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இது 303 சதவீத அதிகரிப்பாகும். அரசுக்குச் சொந்தமான வியாபாரத் தொழில்முயற்சிகள் தமது ஐந்தொகையின் பலத்தின் அடிப்படையில் அபிவிருத்திப் பங்காளர்களிடமிருந்தும் சந்தை மூலங்களிலிருந்தும் நிதிகளைப் பெறுவதனைச் சாத்தியப்படுத்துவதற்காக அவற்றின் ஐந்தொகைகளைப் பலப்படுத்துவதை நோக்காகக் கொண்டு செய்யப்பட்ட மறுசீரமைப்புச் செயற்பாடுகளின் காரணமாகவே இது சாத்தியமாகியது. பொது தொழில்முயற்சிகள் திணைக்களத்தின் விடயப் பரப்பின் கீழ் உள்ள, வரவு செலவுத் திட்ட உதவி வழங்கப்பட்ட அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் பட்டியலொன்று பின்னிணைப்பு IV இல் தரப்பட்டுள்ளது.

### 3.4 உபாயமுறையில் முக்கியத்துவம் பெறுகின்ற அரசுக்குச் சொந்தமான வியாபாரத் தொழில்முயற்சிகளின் பற்றிய சுருக்கம்

பொது தொழில்முயற்சிகள் திணைக்களம், அரசுக்குச் சொந்தமான தொழில் முயற்சிகளிடமிருந்து பருவ கால அடிப்படையில் நிதித் தகவல்களைச் சேகரித்து பகுப்பாய்வு செய்து பெறப்பட்ட பெறுபேறுகளின் அடிப்படையில் அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் பணிப்பாளர் சபைகளுடன் மற்றும்/அல்லது முகாமைத்துவங்களுடன் மீளாய்வுக் கூட்டங்களை நடாத்தியது. அரசுக்குச் சொந்தமான உபாயமுறையில் முக்கியத்துவம் பெறுகின்ற வியாபாரத் தொழில்முயற்சிகளின் நிதியியல் மொத்த விளைவு பின்னிணைப்பு V இல் தரப்பட்டுள்ளது.

## 4. அரசுக்குச் சொந்தமான வியாபாரத் தொழில்முயற்சிகளின் செயலாற்றுகையை மேம்படுத்துவதில் பொது தொழில்முயற்சிகள் திணைக்களத்தின் பங்களிப்பு

### 4.1 அரசுக்குச் சொந்தமான வியாபாரத் தொழில்முயற்சிகளின் செயலாற்றுகைகளை மேம்படுத்துவதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் பொது தொழில் முயற்சிகள் திணைக்களத்தினால் செய்யப்பட்ட சிபாரிசுகள்

அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் குறுகிய கால மற்றும் நடுத்தரக் கால இலக்குகள் அடையப்பெறுவதை உறுதிப்படுத்துவதற்காகப் பின்வரும் முக்கியமான சிபாரிசுகள் முன்வைக்கப்படட்டன.

| துறை | அரசுக்குச் சொந்தமான வியாபாரத் தொழில்முயற்சிகளின் செயலாற்றுகையை மேம்படுத்துவதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| எரிசக்தித் துறை - **இலங்கை மின்சார சபை, இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தபானம்** | **இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தபானம்**<br>2014 ஆம் ஆண்டில் சுத்தீகரிகரிப்பு, மசகு எண்ணெய் இறக்குமதி, டீசல், பெற்றோல், மண்ணெண்ணெய், எரிபொருள் எண்ணெய், விமானங்களுக்கான வாயு என்பன உள்ளிட்ட சுத்தீகரிக்கப்பட்ட உற்பத்திகளின் விற்பனை என்பவற்றில ஈடுபட்டது. 2014 ஆம் ஆண்டில் 4000 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர் பெறுமதியான பெற்றோலியம் மற்றும் அதனுடன் தொடர்புடைய பொருட்கள் இறக்குமதிசெய்யப்பட்டன. இது நாட்டின் மொத்த இறக்குமதிச் செலவில் ஏறக்குறைய நான்கில் ஒரு பகுதியாக உள்ளதுடன் அது அரசாங்கத்தின் வரி வருமானத்தில் 5.5 சதவீத பங்களிப்புச் செய்கின்றது.<br><br>இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் பெற்றோலியத் துறையிலுள்ள மிகப்பெரிய சந்தைச் சக்தியாக விளங்குவதுடன் அது நாட்டின் பெற்றோலியச் சந்தையில் சுமார் 80 சதவீத பங்கினைக் கொண்டுள்ளதுடன் உராய்வு எண்ணெய்க் கைத்தொழிலில் மூன்றாவது மிகப்பெரிய சந்தைச் சக்தியாகவும் விளங்குகின்றது. 2013 பெப்ரவரி மாதம் முதல் பெரும்பாலான பெற்றோலிய உற்பத்திப் பொருட்களுக்கு செலவுகளைப் பிரதிபலிக்கும் விலையிடல் பொறிமுறை அறிமுகப்படுத்தப்பட்டமை, சர்வதேச சந்தையில் பெற்றோலியத்தின் விலைகள் குறைவடைந்தமை என்பவற்றின் காரணமாக 2008 ஆம் ஆண்டு முதல் தொடர்ச்சியாகத் தொழிற்பாட்டு நட்டத்தை எதிர்நோக்கி வந்த இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் 2014 ஆம் ஆண்டில் 1.6 பில்லியன் ரூபாவை தொழிற்பாட்டு இலாபமாக உழைத்தது. மேலும் மசகு எண்ணெய்யின் விலைகள் 2014 ஆம் ஆண்டில் ஒரு பீப்பாய்க்கு சராசரியாக 98 ஐக்கிய அமெரிக்க டொலர்கள் வரை குறைவடைந்தன.<br><br>2014 ஆம் ஆண்டின் வரவுசெலவுத் திட்ட முன்மொழிவுகளின் அடிப்படையில், இலங்கை மின்சார சபையும் பல்வேறு அரசாங்கத் திணைக்களங்களும் நீண்டகாலமாகச் செலுத்த வேண்டியிருந்த படுகடன்களைத் தீர்ப்பதற்காக பொதுத் திறைசேரி 30.69 பில்லியன் ரூபா பெறுமதியான திறைசேரி முறிகள் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்டதுடன் பெற்றோலிய உற்பத்திகளின் இறக்குமதியின் போது அறவிடப்பட்ட வரிகள் மற்றும் தீர்வைகளில் சில இலங்கை பெற்றோலியக் | இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் சுத்தீகரிப்பு நிலையத்தின் பயனை உச்ச அளவில் பெறுவதற்காக எண்ணெய் வழங்கல் விடயத்தில் ஒரு சில நாடுகளில் மாத்திரம் தங்கியிருக்காது மசகு எண்ணெய் வழங்கல்களுக்கான பொருளாதார ரீதியில் வெற்றியளிக்கக்கூடிய மாற்று வழிமுறைகளைக் கண்டறிய வேண்டியுள்ளது.<br><br>இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் சுத்தீகரிப்பு நிலையம் பழைமையானதாகவும் வினைத்திறன் குறைந்ததாகவும் இருப்பதனால், உடனடியாக அதனைத் தரமுயர்த்தி அதன் பழைய குழாய்த் தொகுதிகளைத் திருத்துவதும் அவசரத் தேவையாகவுள்ளது.<br><br>இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் வியாபாரத்தை பொருளியல் முறைப்படி தொடர்ந்து மேற்கொள்வதற்காக மேலதிக உரிமையாண்மையை உட்செலுத்தி அதனை மீள்கட்டமைப்பதன் மூலம் அல்லது நிலைபேறான சம்பாத்தியங்கள் (இலாபங்கள்) மூலம் அதன் ஐந்தொகையைப் பலப்படுத்துவது அவசியமாகும். இதன் போது, நிரல் அமைச்சு, நிதி அமைச்சு என்பவற்றின் உடன்பாட்டுடன் மேலும் புத்தாக்கமுறையான நிதியீட்ட வழிமுறைகள் தொடர்பில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் கவனம் செலுத்துவது அவசியமாகும். அதன் மூலம், இந்த முதலீடுகளிலிருந்து குறிப்பிடத்தக்க அளவு வினைத்திறன்மிக்க பயன்களைப் பெறக்கூடிய வகையில் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும்.<br><br>இலங்கை மின்சார சபை தனது எதிர்கால முதலீட்டு முன்னெடுப்புக்களுக்கான எதிர்காலக் கடன்களைச் சுயாதீனமான முறையில் ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும் என்றும் அந்தக் கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்கான நிதியியல் திட்டங்களைத் தயாரித்துக் கொள்ள வேண்டும் என்று இலங்கை மின்சார சபைக்கு அறிவிக்கப்பட்டது.<br><br>இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் ஏற்படுத்தப்பட்டுள்ள கடன் வரையறைகளைக் கண்டிப்பாகப் பின்பற்றுமாறும் அங்கீகரிக்கப்பட்ட வரையறைகளுக்குள் வங்கி கடன்களை முகாமைசெய்யுமாறும் இலங்கை மின்சார சபைக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. |

| | | |
|---|---|---|
| | கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்த வேண்டிய மண்ணெண்ணெய் மானியத்திற்காகக் கழிக்கப்பட்டன.<br>மேலும், ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ், மிஹின் லங்கா என்பற்று மீள் மூலதனமிடப்பட்டதைத் தொடர்ந்து இந்த இரண்டு நிறுவனங்களும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்த வேண்டிய நிலுவையாகக் காணப்பட்ட 26.11 பில்லியன் ரூபா படுகடன் 2014 ஆம் ஆண்டின் முதற் காலாண்டில் செலுத்தி முடிக்கப்பட்டன.<br><br>2013 ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட கொள்கைத் தீர்மானத்தின் அடிப்படையில், இலங்கை மின்சார சபையின் ஐந்தொகையைப் பலப்படுத்தி இலங்கை மின்சார சபை சுயாதீனமாக இயங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்யும் நோக்கில் 162 பில்லியன் ரூபா பெறுமதியான கடன் தொகையைத் திறைசேரி உரிமையாண்மையாக மாற்றியது. மேலும், 2014 ஆம் ஆண்டில் கடனாக வழங்கப்பட்ட தொகைகளை உரிமையாண்மையாக மாற்றுவதற்குத் தேவையான அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டது.<br><br>இலங்கை மின்சார சபையிடமிருந்து கிடைக்க வேண்டிய வட்டிப் பணத்திற்காக 8.5 பில்லியன் ரூபா பெறுமதியான திறைசேரி முறிகள் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்டன.<br><br>இலங்கை மின்சார சபையின் முகாமைத்துவத்திற்கும் தொடர்புடைய தொழிற் சங்கங்களுக்கும் இடையில் கூட்டு ஒப்பந்தத்தைத் இறுதிநிலைப்படுத்துவதற்கான வசதி ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்பட்டன. | ஊழியர்களின் உரிமைகளை உறுதிப்படுத்தும் அதேவேளை ஊழியத்தின் உற்பத்தித்திறனை மேம்படுத்துவதன் ஊடாக இலங்கை மின்சார சபையின் தொழிற்பாட்டு வினைத்திறனை மேம்படுத்துவதற்காக கூட்டு ஒப்பந்தங்களை நடைமுறைப்படுத்தப்படுத்தும் விடயத்தில் அனைத்துத் தரப்புக்களும் தத்தமது பொறுப்புக்களை நிறைவேற்றுவது அவசியமாகும்.<br><br>மேலும், ஊழியர்களின் ஊதியத்திலிருந்து உழைக்கும் போது செலுத்தும் வரியை நேரடியாகக் கழிப்பதற்கு இலங்கை மின்சார சபை நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| நீர்த் துறை<br><br>**தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபை** | நீர் மற்றும் கழிவுநீரகற்றல் வசதிகளின் வழங்கலுக்குப் பொறுப்பான தேசிய முகவர் என்ற வகையில் தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபை 2014 ஆம் ஆண்டில் 35,668 மில்லியன் ரூபாவை நீர்த் துறையில் முதலீடு செய்து, பின்வரும் முக்கியமான செயற்திட்டங்களை ஆரம்பித்தது.<br>▪ பதுளை, ஹாலிஎல, எல்ல ஒருங்கிணைந்த நீர் வழங்கல் செயற்திட்டம்<br>▪ பாரிய குருநாகல் நீர் வழங்கல் மற்று கழிவுநீரகற்றல் செயற்திட்டம்<br><br>தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபை 2014 ஆம் ஆண்டில் 575 கியூபிக் மீற்றர் நீரை 17,431 மில்லியன் ரூபா செலவில் உற்பத்தி செய்தது. இது 2013 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 5.1 சதவீத அதிகரிப்பாகும். 2013 ஆம் ஆண்டில் 45.35 ரூபாவாகக் காணப்பட்ட ஒரு அலகு (m3) நீருக்கான சராசரி மொத்தச் செலவு 2014 ஆம் ஆண்டில் 44 | தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபை பாதுகாப்பற்ற குடிநீர்ப் பாவனையைக் குறைப்பதற்காக தேசிய மட்டத்திலான நீர் வழங்கல் செயற்திட்டங்களுக்கு முன்னுரிமை வழங்குவது அவசியமாகும். அப்பிரதேசங்களில் காணப்படும் நீடித்த சிறுநீரக நோய்க்கு அது ஒரு தீர்வாக அமையும்.<br><br>கொடை வழங்குநர்களை நாட முன்னர் காணிப் பிரச்சினைகளைத் தீர்ப்பதன் ஊடாக நீர் வழங்கல் செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் காணப்படும் காலதாமதங்கள் குறைக்கப்பட வேண்டும்.<br><br>செயற்திட்டத்திற்கு அங்கீகாரம் கிடைத்ததன் பின்னர் பெறுகைகளில் காணப்படும் காலதாமதங்களைக் குறைப்பதன் ஊடாக தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபையினால் காலதாமதங்களையும் செயற்திட்டங்களின் இரட்டிப்பான செலவினங்களையும் குறைக்க முடியும். |

| | | |
|---|---|---|
| | ரூபாவாகக் குறைவடைந்தது.<br><br>தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபை மொத்த வருமானம் உற்பத்தி அதிகரித்ததன் காரணமாக 2014 ஆம் ஆண்டில் 8.7 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. இதன் மூலம் 2014 ஆம் ஆண்டில் இலாபங்கள் 20 சதவீதத்தால் அதிகரித்து 1,432 மில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது.<br><br>விரிவாக்கத்திற்குத் தேவையான நிதிகளை சுயாதீனமாகப் பெறுவதைச் சாத்தியப்படுத்தும் நோக்கில், தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபையின் ஐந்தொகையைப் பலப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | நாடளாவிய ரீதியில் வருமானம் தராத நீரின் பயன்பாட்டைக் குறைக்கும் உபாயமொன்றை அடையாளம் கண்டு நடைமுறைப்படுத்துதல்.<br><br>நீர் வழங்கல் துறையில் தனியார் துறையினர் முதலீட்டை ஊக்குவித்தல்.<br><br>சமுதாய நிறுவனங்களால் வழங்கப்படும் நீரின் தரத்தை உறுதிசெய்தல்.<br><br>நீர் உற்பத்திக்கான எரிசக்தி செலவைக் குறைப்பதற்காக எரிசக்தி வினைத்திறனை மேம்படுத்துவதற்குப் பொருத்தமான தொழில்நுட்பங்கங்களைப் கைக்கொள்ளுதல்.<br><br>தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபை வினைத்திறன்மிக்க கையிருப்பு முகாமை முறையொன்றை நடைமுறைப்படுத்துவது அவசியாகும்.<br><br>பாவனையாளர்கள் இலகுவான முறையில் நீர் மற்றும் கழிவுநீகரற்றல் இணைப்புக்களைப் பெற்றுக்கொள்வதற்கான வசதி ஏற்பாடுகள் செய்து கொடுப்பதற்கான நிகழ்ச்சித்திட்டமொன்றை நடைமுறைப்படுத்த வேண்டும். |
| பயணிகள் போக்குவரத்துத் துறை<br><br>**இலங்கை போக்குவரத்துச் சபை** | 2014-2018 காலப் பகுதியில் கடன் அடிப்படையில் 2,200 புதிய பஸ் வண்டிகளை வழங்கி பஸ் தொகுதியைப் பலப்படுத்துவதற்காக 5 பில்லியன் ரூபாவை ஒதுக்குவதற்கு அரசாங்கம் உத்தேசித்துள்ளது. இ.போ.ச ஊழியர்களுக்குச் செலுத்த வேண்டிய ஊ.சே.நி, ஊ.ந.நி மற்றும் பணிக்கொடை நிலுவைகள் அனைத்தையும் செலுத்தி முடிக்குமாறு பணிப்புரைகள் வழங்கப்பட்டுள்ளன. | பொருத்தமான தொழிற்பாட்டு முகாமை முறைமையொன்றை நடைமுறைப்படுத்துவதன் ஊடாக தொழிற்பாட்டு வினைத்திறனை மேம்படுத்துதல்.<br><br>பயண ஓட்டத்திற்குப் பயன்படுத்த முடியாத நிலையிலுள்ள பஸ் வண்டிகள் அனைத்தையும் அகற்றுதல்.<br><br>நியதிச்சட்ட நிலுவைகளை, குறிப்பாக ஊ.சே.நி, ஊ.ந.நி மற்றும் பணிக்கொடை நிலுவைகளைச் செலுத்தி முடிப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கும் அதேவேளை மாதாந்தப் பங்களிப்புக்களை உரிய நேரத்தில் வைப்புச் செய்தல்.<br><br>பொருத்தமான உள்ளகக் கட்டுப்பாடுகளை நடைமுறைப்படுத்தப்படுத்துவதன் ஊடாக எரிபொருள் வினைத்திறனின்மை மற்றும் கசிவுகளைக் குறைத்தல். |
| விமானப் போக்குவரத்துத் துறை<br><br>**வ/ப (இலங்கை) விமான நிலைய, விமானப்** | உட்கட்டமைப்பு அபிவிருத்தியில் செய்யப்பட்ட குறிப்பிடத்தக்க முதலீடுகளின் உதவியுடன் நாட்டின் விமானப் போக்குவரத்துத் துறை வளர்ச்சியடைந்துள்ளது.<br><br>மத்தளை ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தின் நிர்மாணத்திற்காகப் பெறப்பட்ட 190 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர் கடன் வசதிக்கான படுகடன் சேவையை வரையறுக்கப்பட்ட இலங்கை விமான நிலைய, விமானப் போக்குவரத்துச் சேவைக் கம்பனிக்கு மாற்றுவதற்கான | ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ், மிஹின் லங்கா என்பன கடந்த பல வருடங்களாகப் பாரிய நட்டங்களை அடைந்ததன் காரணமாக, 100 நாள் புரட்சி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ், தொழிற்பாட்டு வினைத்திறனை அதிகரித்து நட்டங்களைப் படிப்படியாகக் குறைப்பதற்காக வளங்களைப பயனுறுதி வாய்ந்த முறையில் பயன்படுத்தும் எதிர்பார்ப்புடன் ஒரு இடைக்காலத் தீர்வாக இந்த இரண்டு நிறுவனங்களையும் ஒன்றிணைப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்தது.<br><br>பண்டாரநாயக சர்வதேச விமான நிலையத்தின் |

| | | |
|---|---|---|
| **போக்குவரத்துச் சேவை**<br><br>**ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ்**<br><br>**வ/ப மிஹின் லங்கா (தனியார்) கம்பனி** | ஏற்பாடுகளைச் செய்தது.<br><br>வ/ப ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனம் தனது விமானங்களைப் பதிலீடு செய்தல் மற்றும் மூலதனத் தேவைகளைப் பூர்த்திசெய்யக் கூடிய வகையில் அந்நிறுவனத்தின் திரவத் தன்மைப் பிரச்சினைகளைத் தணிப்பதற்காக சின்டிகேட் கடன், சர்வதேச முறி என்பவற்றின் மூலம் நிதி சேகரிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொடுத்தது. அதன் மூலம் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தினால் இவ்வருடத்தில் வருமானங்களை அதிகரித்து செலவுகளைக் குறைக்க முடிந்தது.<br><br>செலவுகளைக் குறைப்பதற்கும் திறைசேரி நிதிகளைப் பயன்படுத்தி இடைவெளிகளை நிரப்புவதற்கும் அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்குமாறு பணிப்புரைகள் வழங்கப்பட்டன.<br><br>அதன் மூலம் நட்டங்களைக் குறைக்க முடிந்தது. | சரக்கு கையாளல் ஆற்றலை மேம்படுத்துதல்<br><br>2016 ஆம் ஆண்டாகும் போது பண்டாரநாயக சர்வதேச விமான நிலையத்தை நவீனமயப்படுத்தி, 12 மில்லியனுக்கு மேற்பட்ட பயணிகளைக் கையாளக்கூடிய வகையில் அதன் ஆற்றலை விரிவுபடுத்துதல்<br><br>பயணிகள் மற்றும் சரக்குப் போக்குவரத்துக்கு அதிகரித்து வரும் கேள்வியைப் பூர்த்திசெய்யக்கூடிய வகையில் நடுத்தரக் காலத்தில் விமானத் தொகுதியை விரிவுபடுத்துதல்.<br><br>தொழில்பாடுகளின் போது செலவு வினைத்திறனைக் குறிப்பிடத்தக்களவில் மேம்படுத்துதல்.<br><br>தொழிற்பாட்டு வினைத்திறனை மேம்படுத்தி பயணிகளுக்கான வசதிகளை நவீனமயப்படுத்துவதற்காக தற்போது காணப்படும் விமானத் தொகுதியைப் பதிலீடு செய்தல்.<br><br>வருமானத்தை மேம்படுத்துவதற்காகன உபாயங்களை நடைமுறைப்படுத்துதல்.<br><br>பயண இலக்கு வலையமைப்புத் தொடர்பை விரிவுபடுத்துதல். |
| துறைமுகங்கள் துறை | வாகனங்களைக் கப்பல்மாற்றுதல் மற்றும் பங்கர் வர்த்தகத்தை ஊக்குவித்து விரிவுபடுத்துவதற்காக மாகம் ருஹுணுபுர மஹிந்த ராஜபக்ஷ துறைமுகத்தில் இலங்கை துறைமுக அதிகாரசபை புதிய ஊக்குவிப்புக் கட்டண விலைகளை அறிமுகப்படுத்தியது. இலங்கை துறைமுக அதிகாரசபை, செலவுகளை ஈடுசெய்வதற்காகவும் புதிய சேவைகளை அறிமுகப்படுத்துவதற்காகவும் கொழும்பு துறைமுகத்தின் கட்டண விலைகளைத் திருத்தியமைத்தது.<br>நவீன பரம்பரைக் கொள்கலன் கப்பல்களைக் கையாளும் ஆற்றல் கொண்ட இலங்கை துறைமுக அதிகாரசபையின் கிழக்கு கொள்கலன் இறங்குதுறை 2015 ஆம் ஆண்டில் இயங்க ஆரம்பிக்கும்.<br>துறைமுக அபிவிருத்திக் செயற்திட்டங்களுக்காக 2014 ஆம் ஆண்டின் இறுதி வரையில் இலங்கை துறைமுக அதிகாரசபை 206 பில்லியன் ரூபா வரையான வெளிநாட்டு நிதிகளையும் 11.9 பில்லியன் ரூபா வரையான உள்நாட்டுக் கடன்களையும் பெறுவதற்கான வசதி ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்பட்டன. | இலங்கை துறைமுக அதிகாரசபையின் மொத்தக் கடன் பொறுப்பு இலங்கை துறைமுக அதிகாரசபையின் மொத்தச் சொத்துக்களில் 66 சதவீதமாகக் காணப்படுவதனால், படுகடன் ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்துவதற்காக அறிவுபூர்வமான படுகடன் முகாமை முறைமையொன்றை நடைமுறைப்படுத்துவதற்கு அது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் சிபாரிசு செய்யப்பட்டது.<br>மேம்படுத்தப்பட்ட உட்கட்டமைப்பு மற்றும் ஏனைய வசதிகளைப் பயன்படுத்தி தொழிற்பாட்டுச் செயற்பாடுகளின் உற்பத்தித்திறனையும் வினைத்திறனையும் மேம்படுத்துவதன் ஊடாக புரள்வை அதிகரிப்பதற்கு இலங்கை துறைமுக அதிகாரசபை உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது.<br>புரள்வை அதிகரிப்பதற்கான ஒரு நடவடிக்கையாக, இலங்கை துறைமுக அதிகாரசபையினால் வெளித் தரப்பினருக்கு வழங்கப்பட்டுள்ள வர்த்தக நோக்கத்திலான காணிகள் தொடர்பான வாடகை ஒப்பந்தங்களை, அவை சந்தை விலைகளைப் பிரதிபலிக்கும் வகையில் அவை காலத்துக் காலம் திருத்தப்படுவதை உறுதி செய்வதற்காக, மீளாய்வு செய்வது பொருத்தமானது என |

| | | |
|---|---|---|
| | | முன்மொழியப்பட்டுள்ளது. |
| நிர்மாணத் துறை | பொதுத் தொழில்முயற்சிகள் குழுவில் திறைசேரி செயலாளரின் பிரதிநிதியாகப் பங்கேற்றதுடன் விலை அங்கீகரிப்புக் குழுக்களில் காணப்படும் தாமதங்கள் நிலுவையாகவுள்ள விடயங்கள் என்பன உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் பொதுத் தொழில்முயற்சிகள் குழுவினால் வழங்கப்பட்ட பணிப்புரைகள் தொடர்பில் பின்தொடர் நடவடிக்கைகளை எடுத்தது.<br><br>மத்திய பொறியியல் ஆலோசனைச் சேவைப் பணியகம், அரசாங்க அபிவிருத்தி, நிர்மாணக் கூட்டுத்தாபனம், அரசாங்க பொறியியல் கூட்டுத்தாபனம் என்பன இத்திணைக்களத்தின் தொடர்ச்சியான மேற்பார்வை, பல்வேறு நினைவூட்டல்கள் என்பவற்றின் காரணமாக 2011 ஆம் ஆண்டு வரையான ஆண்டறிக்கைகளைப் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பித்துள்ளன. மேலும் தாமதமின்றி மீதமுள்ள ஆண்டறிக்கைகளைச் சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. | நிறுவனத்தின் ஆற்றல் வரையறைகளுக்கு உட்பட்ட வகையிலேயே ஒப்பந்தங்கள் பொறுப்பேற்கப்பட வேண்டும்.<br><br>இந்த நிறுவனங்களுக்கு நவீன தரநியமங்களுக்கும் தொழில்நுட்பங்களுக்கும் எண்ணக்கருக்களுக்கும் ஏற்ப வசதிகள் வழங்கப்பட வேண்டும்.<br><br>புதிய பாரிய தொழில்முயற்சிகளைக் கையாளும் ஆற்றல்கொண்ட உயர் தேர்ச்சிபெற்ற ஊழியப் படை ஆட்சேர்ப்புச் செய்யப்பட வேண்டும்.<br><br>ஒவ்வொரு செயற்திட்டத்தையும் பொறுப்பேற்க முன்னர் அச்செயற்திட்டங்களுக்கு வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடுகள் காணப்படுவதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். |
| அரச வங்கிகள் துறை | அரசாங்க வங்கிகளின் செயலாற்றுகை சாராத சொத்துக்களைக் குறைக்கும் நோக்கில், இலங்கை வங்கி, மக்கள் வங்கி, தேசிய சேமிப்பு வங்கி என்வற்றுக்கு ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தில் காணப்பட்ட பங்குகள் மீள் கொள்வனவு செய்யப்பட்டன.<br><br>இலங்கை வங்கியின் Tier I மூலதனத்தைப் பலப்படுத்துவதற்ககா 5 பில்லியன் ரூபா மூலதனம் சேர்க்கப்பட்டது.<br><br>அரசுக்குச் சொந்தமான வியாபாரத் தொழில்முயற்சிகளிடமிருந்து இலங்கை வங்கிக்கு நீண்ட காலமாக நிலுவையாகக் காணப்பட்ட கடன்களைச் செலுத்தி முடிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.<br><br>இலங்கை வங்கியின் சீசெல்ஸ் கிளையில் பணிபுரியும் உள்நாட்டு ஊழியர் பதவிகளுக்கான சம்பளத் திட்டங்களுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது.<br><br>லங்காபுத்ர அபிவிருத்தி வங்கியின் கூட்டு ஒப்பந்தம் தொடர்பான பேச்சுவார்த்தைகளுக்கான வசதி ஏற்பாடுகள் செய்து கொடுத்தது.<br><br>இலங்கை சேமிப்பு வங்கிக்கான கூட்டு | பொருளாதாரத்தின் வளர்ந்துவரும் துறைகளுக்கு கடன் வசதிகளை செய்து கொடுப்பதற்காக அத்தகைய துறைகளை அடையாளம் காணுதல்.<br><br>கடன்களின் தரத்தை மேம்படுத்தி மீள அறவிடும் பொறிமுறையை மேம்படுத்துதல்.<br><br>இலங்கை வங்கி, மக்கள் வங்கி என்பவற்றின் சிறிய மற்றும் நடுத்தரத் தொழில்முயற்சி நிலையங்கள், சிறிய மற்றும் நடுத்தரத் தொழில்முயற்சித் துறையின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் விதத்தில் மறுசீரமைக்கப்பட வேண்டும்.<br><br>இத்துறையிலுள்ள போட்டியாளர்களுடன் போட்டியிடக்கூடியவாறு தொழில்நுட்ப ஆற்றல்களை மேம்படுத்துவது அவசியமாகும்.<br><br>வியாபாரத்தை விரிவுபடுத்தும் நோக்கில் வங்கிகளுக்கு சிறப்பான பயனைப் பெற்றுத்தரும் விதத்தில் ஊக்குவிப்புச் செலவுகளை வழிப்படுத்த வேண்டும். |

| | | |
|---|---|---|
| | ஒப்பந்தத்தை இறுதிநிலைப்படுத்துவதற்கான வசதி ஏற்பாடுகள் செய்து கொடுத்தது. | |
| சந்தைப்படுத்தல் மற்றும் விநியோகம் | ஹொட்டேல் டெவலொப்பர்ஸ் லங்கா பீஎல்சீ<br><br>இலங்கை அரசாங்கத்தின் கடன்களில் 80 சதவீதமும் (10.7 பில்லியன் ரூபா) ஹோட்டல் அமைந்துள்ள குத்தகைக் காணியின் பெறுமதியும் (7 பில்லியன் ரூபா) அரசாங்கத்தின் உரிமையாண்மையாக மாற்றப்பட்டதன் காரணமாக ஹொட்டேல் டெவலொப்பர்ஸ் லங்கா கம்பனியின் மூலதனம் 2013 ஆம் ஆண்டில் 17.7 பில்லியன் ரூபாவினால் அதிகரித்தது. கம்பனியின் ஐந்தொகையை மேலும் பலப்படுத்தும் நோக்கில் மீதமுள்ள 20 சதவீதக் கடன் தொகையான 2.35 பில்லியன் ரூபாவும் 2014 ஆம் ஆண்டில் உரிமையாண்மையாக மாற்றப்பட்டது. அதனடிப்படையில், ஹொட்டேல் டெவலொப்பர்ஸ் லங்கா கம்பனியில் அரசாங்கத்தின் தற்போதைய மூலதனப் பங்கு 20.46 பில்லியன் ரூபாவாகும். 2014/2015, 2015/2016 காலப்பகுதியில் கொழும்பு ஹோட்டலில் மேற்கொள்ளப்படுகின்ற பாரிய புத்துயிரூட்டுதல் நிகழ்ச்சியன் காரணமாக ஹொட்டேல் டெவலொப்பர்ஸ் லங்கா கம்பனியின் வருமானம் 11 சதவீதத்தால் குறைவடைந்துள்ளது. | ஒவ்வொரு செலவீட்டு மட்டத்திலுமுள்ள உள்நாட்டு, வெளிநாட்டு உல்லாசப் பயணிகளைக் கவர்வதற்காக நெகிழ்ச்சித் தன்மைகொண்ட விலைப் பொதிகள் உருவாக்கப்பட வேண்டும்.<br><br>உல்லாசப் பயணிகள் பாரம்பரியான சுற்றுலா வசதிகளை வழங்குவதை விடுத்து உண்மையான, கலாசார ரீதியான அனுபங்களை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| | இலங்கை கைப்பணிப் பொருட்கள் சபை (லக்சல)<br><br>லக்சல நிறுவனத்தின் மொத்தப் புரள்வு 2014 ஆம் ஆண்டில் 19 சதவீதம் அதிகரித்த அதேவேளை அதிகரித்த நிர்வாகச் செலவின் காரணமாக அதன் மொத்தச் செலவு 20 சதவீதத்தால் அதிகரித்தது. அதனால் முன்னைய வருடத்தில் 24 மில்லியன் ரூபாவாகப் பதிவாகியிருந்து வரிக்கு முன்னரான இலாபம் இவ்வருடத்தில் 21 மில்லியன் ரூபாவாக வீழிச்சியடைந்தது. செலவுகளில் ஏற்பட்ட இந்த அதிகரிப்புக்குக் காரணம் குறைந்த வருமானத்தைத் தரும் விற்பனை நிலையங்களுக்கு அதிகரித்த வாடகைகள் செலுத்தப்பட்டமையாகும்.<br>2016 ஆம் ஆண்டில் 2.5 மில்லியன் உல்லாசப் பிரயாணிகளின் வருகை இலக்காகக் கொண்டு சுற்றுலாத் துறை ஊக்குவிப்படுவதனால் உள்நாட்டுப் பரிசுப் பொருள் மற்றும் நினைவுச் சின்னக் கைத்தொழில் துறைக்கு பாரிய சந்தை வாய்ப்புக்கள் உருவாக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுவதனால் கைப்பணிப் பொருட்கள் உற்பத்தித் துறை பாரியளவில் வளர்ச்சியடையும் சாத்தியம் காணப்படுகின்றது. | விரிவடையும் சுற்றுலாத் துறையின் மூலம் உச்ச பயனைப் பெறுவதற்காக உல்லாசப் பயணிகள் மத்தியில் பிரபல்யமடைந்துள்ள பிரதேசங்களில் விற்பனை நிலையங்களை அமைக்க வேண்டும்.<br><br>நிலைபேறானதும் சந்தைப் பங்கை அதிகரிக்கக் கூடியதுமான பொருத்தமான உபாயத் திட்டங்கள் உருவாக்கப்பட்டு நிறுவனத்துடன் இணைக்கப்பட வேண்டும்.<br><br>கட்டடட வாடகைகளைக் குறைப்பது தொடர்பில் கவனம் செலுத்துதல் |
| | வ/ப லங்கா சதொச நிறுவனம்<br><br>16 விற்பனை நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டு தெரிவுசெய்யப்பட்ட சில அத்தியவசியப் பொருட்கள் குறைந்த விலையில் விற்பனை செய்யப்பட்டமையினால் 2014 ஆம் ஆண்டில் வ/ப லங்கா சதொச நிறுவனத்தின் விற்பனை வருமானம் 19 சதவீதத்தால் அதிகரித்தது. | சந்தைப் பங்கை அதிகரிப்பதற்காகப் பொருத்தமான வியாபார உபாயங்கள் கைக்கொள்ளப்படுதல் வேண்டும்.<br><br>ஒவ்வொரு விற்பனைப் பகுதியின் மூலமான வருமானத்துடன் தொடர்புடைய கடன்களை மீளச் செலுத்தி முடிப்பதற்கு நடவடிக்கை எடுப்பது அவசியமாகும். |

| | | |
|---|---|---|
| | வ/ப லங்கா சதொச நிறுவனம் உள்நாட்டுச் சந்தையில் அரிசிக்கு தட்டுப்பாடு ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காக 2014 ஆம் ஆண்டில் 235,000 மெ.தொ அரிசியை இறக்குமதி செய்தது. இந்நோக்கத்திற்காக வ/ப லங்கா சதொச நிறுவனம் 10 பில்லியன் ரூபாவைக் கடனாகப் பெற்றதுடன் 2014 ஆம் ஆண்டின் இறுதி வரையில் 7 பில்லியன் ரூபா மீளச் செலுத்தப்படாமல் காணப்பட்டது. | |
| | வ/ப இலங்கை அரச வர்த்தக (பொது) கூட்டுத்தபானம்<br><br>முன்னைய வருடத்துடன் ஒப்பிடுகையில் இலங்கை அரச வர்த்தக (பொது) கூட்டுத்தபானம் 2014 ஆம் ஆண்டில் தனது வருமானத்தை 34 சதவீதத்தால் அதிகரித்துள்ள போதிலும், செலவினங்களில் குறிப்பாக நிதிச் செலவுகளில் ஏற்பட்ட 36 சதவீத அதிகரிப்பின் காரணமாக வரிக்கு முன்னரான இலாபம் 41 சதவீதத்தால் குறைவடைந்தது. | வாடிக்கையாளர் தளத்தை அரச துறைக்கு மாத்திரம் மட்டுப்படுத்திக் கொள்ளாது, தனியார் துறையினரையும் இலக்காகக் கொண்டு சந்தைப் பங்கை மேம்படுத்துவது அவசியமாகும்.<br><br>காட்சிப்படுத்தல் சந்தைகளுக்கான உற்பத்திப் பொருட்களை உருவாக்கி அறிமுகப்படுத்துதலும் இச்சந்தைகளில் வர்த்தக நாமமிடலை ஊக்குவிப்பதற்கான உபாயங்களை நடைமுறைப்படுத்துதலும். |
| | **அரசாங்க அச்சகக் கூட்டுத்தபானம்**<br><br>அரசாங்க அச்சகக் கூட்டுத்தபானத்தின் வருமானம் 8 சதவீதத்தால் அதேவேளை விற்பனைச் செலவுகளில் ஏற்பட்ட அதிகரிப்பின் காரமாணமாக மொத்தச் செலவினமும் 9 சதவீதத்தால் அதிகரித்தது. அதனால், வரிக்கு முன்னரான இலாபம் 9 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது.<br><br>குறுகிய காலக் கடன்கள் 2014 ஆம் ஆண்டில் 13 சதவீதத்தால் அதிகரித்தமையானது எதிர்காலத்தில் நிதிச் செலவுகள் அதிகரிப்பதற்குக் காரணமாக அமையும். | ஆற்றல்களைப் பயன்படுத்துதல், செலவு வினைத்திறன் என்பவற்றை மேம்படுத்துவதற்கான உபாயங்களை நடைமுறைப்படுத்தி பொருட்களை போட்டி விலை முறையில் வழங்குவது அவசியமாகும்.<br><br>நடுத்தரக் காலத்தில் இலாபமீட்டும் தன்மையை அதிகரிப்பதற்காக, மென்மேலும் செலவுப் பயனுறுதி வாய்ந்த உபாயங்ளைப் பின்பற்றுவதன் மூலம் ஆற்றல்களைப் பயன்படுத்தும் அளவை அதிகரித்து சந்தைப் பங்கை அதிகரிக்க வேண்டும். |
| | **அரசாங்க மரக் கூட்டுத்தபானம்**<br><br>5000 அடிகளுக்கு மேற்பட்ட மரங்களை வெட்டுவதில் உள்ள கட்டுப்பாடுகளின் காரணமாக வருமானம் வீழ்ச்சியடையும் சவாலை எதிர்நோக்குவதனால் திரவத் தன்மை தொடர்பான பிரச்சினைகள் காணப்பட்ட போதிலும் அரசாங்க மரக் கூட்டுத்தபானம் ஒரு இலாபகரமான தொழில்முயற்சியாகவே தொடர்ந்தும் இருந்து வருகின்றது. அரசாங்க மரக் கூட்டுத்தபானத்தின் இலாபத்தில் 50 சதவீதத்துக்கும் அதிகமான பகுதி வட்டி வருமானத்தின் மூலம் பெறப்படுகின்றமை இங்கு கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய ஒரு அம்சமாகும். | அதிக இலாபத்தைப் பெற்றுத் தரும் காட்சிப்படுத்தற் சந்தைக் கேள்விகளைப் பூர்த்தி செய்வதற்கான சூழல் நட்புறவான உற்பத்திப் பொருட்களை வழங்குவதன் மூலம் அரசாங்கத்தின் பசுமைப் பொருளாதாரக் கொள்கைக்கு இணங்க தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்காக தளபாடங்கள் தயாரிப்புத் துறையுடன் உபாயமுறைப் பங்குடமைகளைக் கட்டியெழுப்புதல்.<br><br>மரங்களின் மூலம் அதிக பயன்களைப் பெறும் நோக்கில் துண்டங்களாக்கும் போது ஏற்படும் விரயங்களைக் குறைத்தல். |

| | | |
|---|---|---|
| உரங்கள் | **வ/ப லங்கா உரக் கம்பனி**<br><br>2014 ஆண்டில் 40 சதவீதமான திட்டங்கள் அரச துறைக்கு வழங்கப்பட்டதன் காரணமாக, கம்பனியின் பிரதான வியாபார வருமானம் 27 சதவீதத்தால் அதிகரித்தது. 2013/2014 காலப் பகுதியில் 19,000 மெ.தொன்களாகக் காணப்பட்ட லங்கா உரக் கம்பனியினால் பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்த நெல் உரத்தின் அளவு 2014/2015 காலப்பகுதியில் 13 சதவீதத்தால் அதிகரித்து 212,000 மெ.தொ ஆகக் காணப்பட்டது.<br><br>2013/2014 காலப்பகுதியில் 244 மில்லியன் ரூபாவாகக் காணப்பட்ட வ/ப லங்கா உரக் கம்பனியின் வரிக்கு முன்னரான இலாபம் 288 மில்லியன் ரூபா அதிகரித்துள்ளது. இவ்வருடத்தில் ஏற்பட்ட இந்த தொழிற்பாட்டுச் செயலாற்றுகை முன்னேற்றத்தின் காரணமாக வ/ப லங்கா உரக் கம்பனி 38 மில்லியன் ரூபாவை அரசாங்கத்துக்குப் பங்கிலாபமாகச் செலுத்தியது.<br><br>**கொழும்பு கொமர்ஷல் பெர்டிலைசர்ஸ் லிமிடட்**<br><br>2014 ஆண்டில் ஏனைய பயிர்களுக்கான உர மானியத் திட்டத்தின் 40 சதவீதம் அரச துறைக்குத் திறக்கப்பட்டதை அடுத்து, 2013/14 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 1,372 மில்லியன் ரூபாவாகக் காணப்பட்ட கொழும்பு கொமர்ஷல் பெர்டிலைசர்ஸ் லிமிடட் நிறுவனத்தின் வருமானம் 2014/2015 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 15.5 சதவீதத்தால் அதிகரித்து 1,625 மில்லியன் ரூபாவாக அமைந்தது. இவ்வருடத்தில் கொழும்பு கொமர்ஷல் பெர்டிலைசர்ஸ் லிமிடட்டின் வரிக்கு முன்னரான இலாபம் 75 சதவீதத்தால் அதிகரித்தது. | பெருந்தோட்டங்களை அண்மித்த பிரதேசங்களில் பயனுறுதி வாய்ந்த களஞ்சிய வசதிகள் காணப்படுவது தட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதற்கும் மானியங்கள் அறிவுபூர்வமான முறையில் பயன்பட்டுத்துவதற்குமான அத்தியவசியத் தேவையாகவும் உள்ளது.<br><br>இலங்கை உரக் கூட்டுத்தாபனத்திலுள்ள ஸ்டேட் ஒஃப் ஆர்ட் கலவை வசதிகள் காணப்படமையினால் ஏனைய பயிர்களுக்கான உரங்களை விவசாயிகளுக்கு வினைத்திறன்மிக்க முறையில வழங்குவது சிரமமானதாக மாறியுள்ளது. அதனால் களஞ்சிய வசதிகளையும் கலப்பதற்கான வசதிகளையும் பொருத்தமான முறையில் அபிவிருத்தி செய்து மேம்படுத்துவதற்காக முதலீடு வழிப்படுத்தும் பணியைக் கம்பனி முன்னெடுப்பது அவசியமாகும்.<br><br>தட்டுப்பாடுகளையும் மேலதிக கொள்வனவுகளையும் தவிர்ப்பதற்காக கொழும்பு கொமர்ஷல் பெர்டிலைசர்ஸ் லிமிடட் நிறுவனம் தேவையான சந்தர்ப்பத்தில் தேவையான இடத்தில் மானிய உரங்களை வழங்குவது தொடர்பில் கவனம் செலுத்துவது அவசியமாகும். |
| காப்புறுதித் துறை | வருடத்துக்கு வருடம் 5 சதவீதம் அதிகரிப்பு என்ற அடிப்படையில் 23 சதவீத சம்பள அதிகரிப்பைக் கொண்ட 2013-2016 காலப்பகுதிக்கான கூட்டு ஒப்பந்தம் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தபானத்தில் கைச்சாத்திடப்பட்டது.<br><br>இடைநிறுத்தப்பட்டிருந்த விவசாயிகள் காப்புறுதித் திட்டம் அதிகரித்த பயன்களுடன் இவ்வருடத்தில் மீள ஆரம்பிக்கப்பட்டது. | நாட்டில் காப்புறுதி குறைவாகப் பிரபலமடைந்திருப்பதுடன் பாரியளவில் விரிவடைவதற்கான சாத்தியத்தையும் கொண்டிருப்பதனால், பயன்படுத்தப்படாத சந்தைகளைப் பயன்படுத்துவதற்கான புதிய வியாபாரம் அபிவிருத்தி உபாயங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டியுள்ளன.<br><br>வேறுபடுத்தப்பட்ட/ நெகிழ்ச்சியான பண்டங்கள் என்பன போன்ற போட்டித்தன்மை வடிவ மாற்றுத்தெரிவுகளின் ஊடாக சிறந்த எழுத்துறுதி உத்தரவாதத்தைப் பேணுதல். |

| | | |
|---|---|---|
| பண்ணை<br><br>விலங்குகள் துறை | **மில்கோ (பிரைவெட்) லிமிடட்**<br><br>மில்கோ நிறுவனம் இலாபமீட்டுவதற்காகத் தனது உற்பத்திப் பொருட்களின் விலைகளை மீளாய்வு செய்வதற்கான வசதி ஏற்பாடுகளைத் திறைசேரி மேற்கொண்டது.<br><br>அம்பேவலை, திகனை, பொலனறுவை ஆகிய இடங்களிலுள்ள மூன்று தொழிற்சாலைகளைப் புதுப்பிப்பதற்காக 33.8 மில்லியன் யூரோக்களைக் கடனாகப் பெறுவதற்கான வசதி ஏற்பாடுகளை திறைசேரி மேற்கொண்டது. அவற்றில் இரண்டு தொழிற்சாலைகளின் புதுப்பித்தல் வேலைகள் ஏற்கனவே பூர்த்தியடைந்துள்ளடன் மற்றையதன் (அம்பேவலை) வேலைகள் 2015 ஆம் ஆண்டின் இறுதியில் பூர்த்தி செய்யப்படும்.<br><br>மில்கோ நிறுவனம் தனது தொழிற்சாலைகளைப் புதுப்பிக்க ஆரம்பித்துள்ளதுடன் நாட்டில் பால் நுகர்வை ஊக்குவிப்பதற்காக புதிய நிகழ்ச்சியொன்றை ஆரம்பித்துள்ளது.<br><br>**தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்திச் சபை**<br><br>2500 அதிக பால் தரும் பசுமாடுகளை இறக்குமதி செய்வதற்காக புதிதாக 20 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களை தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்திச் சபை கடனாகப் பெறுவதற்கான வசதி ஏற்பாடுகள் செய்யப்பட்டன. அவற்றில் அரைப் பகுதி (1250) பசுக்களை இறக்குமதி செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. அவற்றில் அரைப்பகுதி எதிர்வரும் 3 மாதங்களில் வந்தடையும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. அவை வந்தடைந்ததன் பின்னர் ரிதியாகமை பண்ணைக்கு கொண்டு செல்லப்படும்.<br><br>தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்திச் சபை பிரதான நகரங்களில் 79 பால் விற்பனை நிலையங்ளைத் திறந்துள்ளது. | தற்போது பயன்படுத்தப்படாதுள்ள கேள்வியைச் சிறப்பாகப் பயன்படுத்துவதற்கு சந்தை முகவர்களைத் தூண்டுவதன் ஊடாகத் திரவப் பால் நுகர்வை ஊக்குவித்தல்.<br><br>முறைசாராத மற்றும் பாரம்பரிய பால் மற்றும் பண்ணைச் சந்தைகளை அடையாளம் கண்டு அச்சந்தைகளை ஒழுங்குபடுத்துவதற்காகப் பயனுறுதி வாய்ந்ததும் பொருத்தமானதுமான சந்தைப் பொறிமுறையை அறிமுகப்படுத்துதல்.<br><br>பொது மக்கள் மத்தியில் பசும் பால் நுகர்வை ஊக்குவித்தல். |
| பெருந்தோட்டத்<br><br>துறை | பிராந்தியப் பெருந்தோட்டக் கம்பனிகளின் செயலாற்றுகையை மதிப்பீடு செய்வதற்காக ஒரு குழு நியமிக்கப்பட்டதுடன் அளவுகோள்களும் உருவாக்கப்பட்டன.<br><br>அரசுக்குச் சொந்தமான பெருந்தோட்டச் தொழில்முயற்சிகளில் (எல்கடுவை, இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம், மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை) மரப் பலகை அறுவடையின் முன்னேற்றத்தை மீளாய்வு செய்து அத்தொழில்முயற்சிகளின் நீண்ட காலமாக நிலுவையாகவுள்ள நியதிச்சட்ட நிலுவைகளைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.<br><br>கணக்காய்வாளர் நாயகத்தினால். சுட்டிக்காட்டப்பட்ட விடயங்கள் மற்றும் பொதுத் தொழில்முயற்சிகள் குழுவின் சிபாரிசுகள் தொடர்பில் பரிகார நடவடிக்கைகள் எடுக்கப்படன. | விளைச்சலை அதிகரித்து உற்பத்திச் செலவைக் குறைக்கும் நோக்கில் மீள்கட்டமைப்புச் செயன்முறையைத் துரிதப்படுத்துதல்.<br><br>தேவையான சந்தர்ப்பங்களில் புதிய தொழில்நுட்பங்களையும் மூலதனத்தையும் சேர்த்தல்.<br><br>இத்துறையின் மாற்றமடைந்து வரும் தேவைகளைப் பூர்த்திசெய்யக் கூடிய வகையில் தொழில்நுட்பத்தை இற்றைப்படுத்துதல்.<br><br>மூலப் பொருட் உற்பத்தியிலிருந்து பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்தியை நோக்கி நிலைமாறுதல்<br><br>தொழிற்பாட்டு வினைத்திறனையும் தேயிலை உற்பத்திகளின் தரத்தையும் மேம்படுத்துவதற்காக பச்சைத் தேயிலை இலைகளைப் பதனிடுவதற்கான புதிய புத்தாக்கத் தன்னியக் |

| | | |
|---|---|---|
| | | முறையை அறிமுகப்படுத்தியமை.<br><br>உள்நாட்டு மற்றும் சர்வதேச தேயிலை உற்பத்தியாளர்கள் மத்தியில் போட்டிபோடக்கூடியதாக இருப்பதற்காக பெறுமதிச் சேர்க்கைச் செயன்முறை தொடர்பான உரிய அறிவும் பயிற்சியும் வழங்கப்படடன.<br><br>உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்காகத் தேவையான சந்தர்ப்பங்களில் மீள்நடுகையைத் துரிதப்படுத்துதல். |
| புதுப்பிக்கமுடியாத மூலவளங்கள் | வருடாந்தப் பொதுக் கூட்டங்களில் பங்கேற்று பொதுத் தொழில்முயற்சிகளின் நல்லாட்சியின் அடிப்படையில் வரித் தாக்கங்களைக் கவனத்திற் கொண்டு பங்கிலாபங்கள் ஒழுங்குபடுத்துவதற்கு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் ஆலோசனைகள் வழங்கப்பட்டன. | மென்மேலும் பெறுமதிச் சேர்க்கையை மேற்கொள்வதன் ஊடாகப் பொருளாதாரத்திற்கு அதிக பங்களிப்பைச் செய்வதற்கு குறிப்பிடத்தக்களவில் மூலதனத்தைச் சேர்ப்பது அவசியமாகவுள்ளது.<br><br>எதிர்காலத்தில் அதிகரித்து வரும் கேள்வியைப் பூர்த்திசெய்வதற்கு இந்த வளங்களை ஒழுங்குபடுத்தப்பட்ட முறையில் பயன்படுத்துவது அத்தியவசியமானதாகவுள்ளது. |
| சுகாதாரத் துறை | **இலங்கை ஆயுர்வேத மருந்துப் பொருட் கூட்டுத்தபானம்**<br><br>கூட்டுத்தபானத்தின் உற்பத்தியை அதிகரிப்பதற்கான கொடுப்பனவு வழங்கும் திட்டத்தை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதுடன் நிதியில், பதவியிணை தொடர்பான பிரச்சினைகள், கணக்காய்வுக் கேள்விகள் என்பவற்றுடன் தொடர்புடைய நிர்வாகப் பிரச்சினைகள் தொடர்பில் பல்வேறு கலந்துரையாடல் நடாத்தப்பட்டன. | அடையாளம் காணப்பட்ட உல்லாசப் பயணிகள் கவனத்தை ஈர்த்துள்ள இடங்கள் உள்ளிட்ட சந்தைகளில் கேள்வியை அதிகரிப்பதற்காக புதிய மூலிகை உற்பத்திகள் மற்றும் ஆயுர்வேத மருந்துகள் தொடர்பான ஊக்குவிப்புப் பிரசாரங்களை நடைமுறைப்படுத்துதல்.<br><br>உற்பத்தியாற்றலை மேம்படுத்துவதற்காக நாவின்னையிலுள்ள புதிய காணியை மேம்படுத்துதல்.<br><br>கூட்டுத்தபான வளவிலுள்ள களஞ்சியக் கட்டடத்தொகுதி 2014 ஆம் ஆண்டில் மேலும் அபிவிருத்தி செய்யப்பட்டது. |
